திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, ஷூட்டிங் எடுக்க Dams இப்படிப்பட்ட இடங்களிலே ஷூட்டிங் கட்டணத்தைக் குறைத்திருப்பதால் நிறைய சினிமா முதலாளிகள் அப்படிப்பட்ட இடங்களைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதும், அதனால் நமது அரசாங்கத்திற்கு நிறைய வருமானம் வருகிறது என்பதும் உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஓரளவிற்கு அது சுற்றுலாவிற்குப் பயன்படலாம்.

கோவை சுற்றுப்புற நகர ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி

* 57. **வினா.—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகராட்சி மன்றம், சிங்காநல்லூர் நகராட்சி மன்றம், பேரூர் ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளை கோயம்புத்தூர் 'பி' பிரிவு நகரமாக அறிவித்து, அப்பகுதிகளில் அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி கொடுக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. என். மருதாசலம் : கோவை நகராட்சி, சிங்காநல்லூர் நகராட்சி பேரூராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பி பிரிவு நகரமாக ஆக்கி இருப்பதால் அந்த நகராட்சியிலுள்ள சிப்பந்திகளுக்கு வீட்டு வாடகைப்படியை உயர்த்திக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த வீட்டு வாடகைப் படி வீதங்களை எவ்வாறு அனுமதிப்பது என்பது குறித்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதற்கு எவ்வளவு செலவாகும் என்ற விஷயத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் விவரம் கேட்கப்பட்டு, அவருடைய பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : இப்போது கோவை நகரம் இரண்டாம் நிலை நகராட்சியாக அறிவிக்கப்பட்டிருப்பதால் அதிகப்படியாக வீட்டு வாடகைப் படியை வழங்குகின்றபோது கோவையைச் சுற்றி ஐந்து மைல் உள்ள பெல்ட் ஏரியாவையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அரசாங்கம் வீட்டு வாடகைப் படியை வழங்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லா விவரங்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது என்று சொன்னேன்.